# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006.

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு மார்ச் – 2025

### உயிரி - தாவரவியல் (பகுதி– 1) விடைக்குறிப்புகள் – (தமிழ் வழி)

**மொத்த மதிப்பெண்கள்: 35**

குறிப்பு

1. ஏற்புடைய விடையின் குறியீடு மற்றும் அதன் விடை எழுதியிருக்க வேண்டும்.
2. படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்.

### பிரிவு– 1

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 8×1 =8

| வகை A | | | வகை B | | | |
|---|---|---|---|---|---|---|
| வினா எண் | குறியீடு | விடை | வினா எண் | குறியீடு | விடை | மதிப் பெண் |
| 1. | (அ) | 7 | 1. | (இ) | மண் | 1 |
| 2. | (ஈ) | 2 -10% | 2. | (ஈ) | ஆக்குத்திசு வளர்ப்பு | 1 |
| 3. | (இ) | விதை | 3. | (ஈ) | 2 -10% | 1 |
| 4. | (ஈ) | DNA | 4. | (அ) | அப்பிக்கோ இயக்கம் | 1 |
| 5. | (ஈ) | ஆக்குத்திசு வளர்ப்பு | 5. | (இ) | மனிதர்களின் தோல் நிறம் | 1 |
| 6. | (அ) | அப்பிக்கோ இயக்கம் | 6. | (இ) | விதை | 1 |
| 7. | (இ) | மண் | 7. | (அ) | 7 | 1 |
| 8. | (இ) | மனிதர்களின் தோல் நிறம் | 8. | (ஈ) | DNA | 1 |



Scanned with OKEN Scanner

<u>பிரிவு – 2</u>

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். 4× 2 = 8

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 9 | மெல்லிட்டோபில்லி<br>தேனீக்களின் மூலம் நடைபெறும் மகரந்த சேர்க்கை | 2 |
| 10 | போலன்கிட்<br>1. போலன்கிட் உருவாக்கத்தில் டபீட்டம் பங்களிக்கிறது. கரோட்டினாய்டு அல்லது ப்ளேவினாய்ட் இதற்கு மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிறத்தை தருகிறது.<br>2. மகரந்ததுகள்களின் புறப்பரப்பில் காணப்படும் பிசுபிசுப்பான பூச்சு கொண்ட எண்ணெய் அடுக்காகும்.<br>3. இது பூச்சிகளைக் கவர்வதுடன் புற ஊதாக்கதிர்களிலிருந்தும் பாதுகாக்கிறது.<br>(ஏதேனும் இரண்டு) | 2 |
| 11 | மடியத்தின் முக்கியத்துவம்<br>1. இருமடியத் தாவரங்களை விடப் பல பன்மடியத் தாவரங்கள் அதிக வீரியத்துடனும் அதிக தகவமைப்புடனும் காணப்படும்.<br>2. பெரும்பாலான அலங்கார தாவரங்கள் தன்நான்மடியத் தாவரங்கள் ஆகும். இவை இருமடியத் தாவரங்களை விட பெரிய மலர் மற்றும் நீண்ட மலரும் காலத்தைக் கொண்டிருக்கும்.<br>3. அதிகப்படியான நீர் சத்தினை கொண்டிருப்பதால் தன்பன்மடியத் தாவரங்கள் அதிக உயிர் எடையை பெற்றுள்ளது.<br>4. மெய்யிலாமடியத் தாவரங்கள் வேறுபட்ட குரோமோசோம்களில் இழப்பு மற்றும் சேர்ப்பின் புறத்தோற்ற விளைவுகளை தீர்மானிக்க பயன்படுகிறது.<br>5. பல ஆஞ்ஜியோஸ்பெர்ம் தாவரங்கள் அயல்பன்மடியம் கொண்டவை. அவை பரிணாமத்தில் முக்கிய பங்காற்றுகிறது.<br>( ஏதேனும் இரண்டு) | 2 |
| 12 | நுண்பெருக்கத்திற்கு எடுத்துக்காட்டுகள்<br>1. அன்னாசி<br>2. வாழை<br>3. ஸ்ட்ராபெர்ரி<br>4. உருளைக்கிழங்கு<br>( ஏதேனும் இரண்டு) | 2 |



Scanned with OKEN Scanner

<table>
<tr><td>13</td><td colspan="2">பயிர் பெருக்கத்தின் குறிக்கோள்கள்<br>1. பயிர்களின் விளைச்சலையும், வீரியத்தையும் , வளமையையும் அதிகரித்தல்.<br>2. வறட்சி, வெப்பநிலை, உவர்தன்மை மற்றும் அனைத்துச் சூழல்நிலைகளையும் தாங்கி வளரும் திறன்.<br>3. முதிர்ச்சிக்கு முன்னரே மொட்டுகள் மற்றும் பழங்கள் உதிர்வடைதலை தடுத்தல்.<br>4. சீரான முதிர்ச்சியை மேம்படுத்தல்<br>5. பூச்சி மற்றும் நோய் உயிரிகளை எதிர்த்து வாழும் திறன்.<br>6. ஒளி மற்றும் வெப்பக் கூருணர்வு இரகங்களை உருவாக்குதல்.<br>(ஏதேனும் இரண்டு)</td><td>2</td></tr>
<tr><td rowspan="2">14</td><td>உயிரி மருந்து</td><td>தாவர மருந்து</td><td rowspan="2">2</td></tr>
<tr><td>தாவரங்களிலிருந்து பெறப்படும் மருத்துவ மூலக்கூறுகளுள்ள மருந்துகள்</td><td>பொடிகள் அல்லது வேறு வகைகளில் சந்தைப்படுத்தப்படும் மருத்துவ தாவரங்கள்</td></tr>
</table>

## பிரிவு – 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 19–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

**3 × 3 = 9**

<table>
<tr><th>வினா எண்</th><th>விடை</th><th>மதிப்பெண்</th></tr>
<tr><td>15</td><td>மெய்யிலா மடியத்தின் வகைகள்<br>
<br>(ஏதேனும் 3 படம்)</td><td>3</td></tr>
</table>



Scanned with OKEN Scanner

| | | |
|---|---|---|
| 16 | செயற்கை விதையின் நன்மைகள்<br>1. குறைந்த செலவில் எந்தக் காலத்திலும் மில்லியன் கணக்கான செயற்கை விதைகளை உற்பத்தி செய்யலாம்.<br>2. விரும்பிய பண்புகளைக் கொண்ட மரபணு மாற்றப்பட்ட தாவரங்களை இம்முறையில் எளிதாக உருவாக்கலாம்.<br>3. தாவரங்களின் மரபணு சார் வகைய விகிதத்தை எளிதாகச் சோதனை செய்யலாம்.<br>4. உறைகுளிர் பாதுகாப்பு முறையில் செயற்கை விதைகளை நீண்ட நாட்களுக்குத் திறன் மிக்கவையாகச் சேமித்து வைக்கலாம்.<br>5. செயற்கை விதைகள் மூலமாக உருவொத்த தாவரங்களை உருவாக்கலாம்.<br>6. செயற்கை விதைகளில் விதை உறக்கக் காலம் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் குறுகிய வாழ்கை சுழற்சியுடன் கூடிய வேகமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. (ஏதேனும் மூன்று) | 3 |
| 17 | வணிக வேளாண் காடு வளர்ப்பு மூலம் வளர்க்கப்படும் தாவரங்கள்<br>1. கேசுரைனா<br>2. யூக்களிப்டஸ்<br>3. மலைவேம்பு<br>4. தேக்கு<br>5. கடம்பு<br>(ஏதேனும் மூன்று) | 3 |
| 18 | கலப்பின வீரியம்<br>• பெற்றோரை விடக் கலப்புயிரி முதல் மகவுச் சந்ததியின் செயல்திறன் மேம்பட்டிருப்பதால் இது கலப்புயிரி வீரியம் என்றழைக்கப்படுகிறது.<br>• G.H.ஷல் ஹெட்டிரோசிஸ் என்ற சொல்லை 1912– ஆம் ஆண்டு முதலில் பயன்படுத்தினார். வீரியம் என்பது அதிக வளர்ச்சி, விளைச்சல், நோய் எதிர்க்கும் திறன், பூச்சியையும், வறட்சியையும் தாங்கி வளரும் திறனை குறிக்கிறது. | 2<br>1 |
| 19 | அரிசியின் பொருளாதார முக்கியத்துவம்<br>1. அரிசி கலோரி மிகுந்த எளிதில் செரிமானமாகக் கூடிய உணவு. இது தெற்கு மற்றும் வடகிழக்கு இந்தியாவில் முக்கிய உணவாகப் பயன்படுத்தப்படுகிறது.<br>2. அவல், பொரி போன்ற அரிசி பொருட்கள் காலை உணவாகவும், சிற்றுண்டியாகவும் பயன்படுகிறது.<br>3. அரிசி தவிட்டிலிருந்து பெறப்பட்ட தவிட்டு எண்ணெய் சமையலிலும், தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது.<br>4. உமி எரிபொருளாகவும், பொதி கட்டுவதற்கும் உரம் போன்றவை தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.<br>(ஏதேனும் மூன்று) | 3 |



Scanned with OKEN Scanner

## பிரிவு –4

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2×5 =10

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 20 (அ) | இருபண்பு கலப்பு சோதனை<br>• வரையறை<br>• விளக்கம் (அல்லது) புன்னெட் சதுரம் (வரைபடம்)<br>• விகிதம் | <br>2<br>2<br>1 |
| | (அல்லது) | |
| 20 (ஆ) | Bt பருத்தியின் நன்மை மற்றும் தீமைகள்<br>நன்மைகள் – (ஏதேனும் இரண்டு)<br>1. பருத்தி விளைச்சல் அதிகரிக்கிறது ஏனெனில் காய்ப்புழுக்களின் தாக்குதல் நன்கு கட்டுப்படுத்தப்படுகிறது.<br>2. Bt பருத்தி பயிரிடுவதில் பயன்படுத்தப்படும் பூச்சி மருந்து குறைக்கப்படுகிறது.<br>3. பயிர் வளர்ப்பில் உண்டாகும் செலவு குறைகிறது.<br>தீமைகள் – (ஏதேனும் மூன்று)<br>1. Bt பருத்தி விதையின் விலை அதிகம்<br>2. இதன் வீரியம் முதல் 120 நாட்கள் மட்டுமே பின்னர் இதன் வீரியம் குறைகிறது.<br>3. சாறு உறிஞ்சும் தத்துப்பூச்சிகள், அசுவினிப் பூச்சிகள் , வெள்ளை ஈக்கள் போன்றவற்றிற்கு எதிராக இது செயல்படுவதில்லை<br>4. மகரந்தச் சேர்க்கையில் துணைபுரியும் பூச்சிகளை பாதிக்கிறது. இதனால் விளைச்சல் குறைகிறது. | 2<br><br>3 |
| 21 (அ) | உவர் சதுப்புநிலத்தாவரங்களின் புறத்தோற்ற பண்புகள்<br>1. மித வெப்ப மண்டலப் பகுதிகளில் காணப்படும் உவர் சதுப்புநிலத்தாவரங்கள் சிறு செடிகளாகவும், வெப்ப மண்டலப்பகுதிகளில் காணப்படும் உவர் சதுப்பு நிலத் தாவரங்கள் பெரும்பாலும் புதர் செடிகளாகவும் காணப்படுகின்றன.<br>2. இயல்பானவேர்களுடன் கூடுதலாக முட்டு வேர்கள் இவற்றில் தோன்றுகின்றன.<br>3. புவிஈர்ப்பு விசைக்கு எதிராக இவற்றில் தோன்றும் சிறப்பு வகை வேர்கள் நிமட்டோஃபோர்கள் எனப்படுகின்றன. அதில் அமைந்துள்ள நிமத்தோடுகள் கொண்டு தாவரம் அதற்குத் தேவையான அளவு காற்றோட்டத்தைப் பெறுகிறது. இவை சுவாசிக்கும் வேர்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. எ.கா அவிசென்னியா<br>4. தாவர உடலத்தின் தரைமேல் பகுதிகள் தடித்த கியூட்டிக்கிளை பெற்றுள்ளது. | 5 |



Scanned with OKEN Scanner

| | | |
|---|---|---|
| | 5. இலைகள் தடித்தவை, முழுமையானவை , சதைபற்றுள்ளவை , பளபளப்பானவை. சில சிற்றினங்களில் இலைகள் காணப்படுவதில்லை.<br>6. கனிக்குள் விதை முளைத்தல் வகையான விதை முளைத்தல் அதாவது கனியில் உள்ளபோதே விதைகள் முளைப்பது உவர் சதுப்பு நிலத் தாவரங்களில் காணப்படுகிறது.<br>(ஏதேனும் ஐந்து) | |
| (அல்லது) | | |
| 21 (ஆ) | i) உணவு வலை வரையறு<br>உணவுச்சங்கிலிகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து வலை போல் அமைந்திருந்தால் அது உணவு வலை எனப்படுகிறது. | 2 |
| | ii) உணவு வலையின் முக்கியத்துவம் (ஏதேனும் மூன்று)<br>1. நேரடி இடைச்செயல் எனப்படும் சிற்றினங்களுக்கிடையே நிகழும் இடைவிளைவை விளக்கவே உணவு வலை உருவாக்கப்படுகிறது.<br>2. இது வேறுபட்ட சிற்றினங்களுக்கிடையேயுள்ள மறைமுகத் தொடர்புகளை விளக்க பயன்படுகிறது.<br>3. குழும கட்டமைப்பின் கீழ்நிலை உயர்நிலை அல்லது உயர்நிலை கீழ்நிலை கட்டுப்பாட்டுகளை அறிய இது பயன்படுகிறது.<br>4. நில மற்றும் நீர்வாழ் சூழல் மண்டலங்களின் வேறுபட்ட ஆற்றல் பரிமாற்றங்களை வெளிப்படுத்த இது பயன்படுகிறது. | 3 |



Scanned with OKEN Scanner